# கூட்டுறவு ஆசிரியர் பயிற்சி நிறுவனம்

62,சுய்ப்ரேன் வீதி,புதுச்சேரி – 605001

## ஆசிரியர் கல்வி பட்டயப் படிப்பு (D.T.Ed TAMIL MEDIUM)

தகவல் குறிப்பேடு : 2011-2012

புதுவை மாநில கூட்டுறவு ஒன்றியத்தின் கீழ் இயங்கிவரும் கூட்டுறவு ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் 2011-2012 ஆம் ஆண்டிற்கான இரண்டாண்டுகள் ஆசிரியர் பட்டயப் படிப்பு வகுப்புச் சேர்க்கைக்கு, புதுச்சேரி யூனியன் ஆட்சிப் பரப்பைச் சேர்ந்த மாணவ மாணவியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**சேர்க்கைக்கான கல்வித் தகுதி**

மேனிலைப் பள்ளிப் பொதுத் தேர்வில் (+2) அல்லது அதற்குச் சமமான தேர்வில் குறைந்தபட்சம் 50% மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும். எனினும், அட்டவணை இனத்தவர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் குறைந்தபட்சம் 45% மதிப்பெண் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது வரம்பு**

சேர்க்கைக்கான அதிகபட்ச வயது 29 ஆகும். 31.07.2011 அன்று முடிய 29 வயதுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும். எனினும்,அட்டவணை இனத்தவருக்கு 5(ஐந்து)ஆண்டுகளும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 3(மூன்று) ஆண்டுகளும், வயது வரம்பில் சலுகை உண்டு.

**விண்ணப்பம் கிடைக்குமிடம்:**

கூட்டுறவு ஆசிரியர் பயிற்சி நிறுவனம், 62, சுய்ப்ரேன் வீதி, புதுச்சேரி-605001.

**விண்ணப்பம் பெறும் முறை:**

விண்ணப்பத்தின் விலை ரூ200/- அஞ்சல் வழியாக விண்ணப்பம் பெற விரும்புவோர் சேர்க்கை விண்ணப்பம் வேண்டி ஒரு மடல் மற்றும் Co-operative Teacher Training Institute, Puducherry என்ற பெயரில் பெறப்பட்ட அரசுடைமை வங்கியின் வரைவோலை (Demand Draft) ஆகிய இரண்டையும் இணைத்து இந்நிறுவனத்திற்கு அனுப்பி பெறலாம்.

**விண்ணப்பம் வழங்கப்படும் காலம்:**

சேர்க்கை விண்ணப்பம் மே மாதம் 24 ஆம் தேதி முதல் ஜீன் மாதம் 16.06.2011 தேதி வரை, அனைத்து அலுவலக வேலை நாட்களிலும், 62, சுய்ப்ரேன் வீதி, கூட்டுறவு ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் கிடைக்கும்.

**விண்ணப்பம் வந்து சேர வேண்டிய கடைசி நாள்:**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைத் தேவையான நகல் சான்றிதழ்களுடன் 16.06.2011 மாலை 5.30 மணிக்குள் புதுச்சேரி, 62, சுய்ப்ரேன் வீதி, கூட்டுறவு ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

**விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய நகல் சான்றிதழ்கள்:**

1. இறுதியாகப் பயின்ற கல்வி நிறுவனத்தின் மாற்றுச் சான்றிதழ்
2. 12 ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்
3. 10 ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்
4. குடியுரிமைச் சான்றிதழ்
5. குடியிருப்புச் சான்றிதழ்
6. இனச் சான்றிதழ்
7. சிறப்பு இட ஒதுக்கீட்டிற்கான சான்றிதழ் (தகுதி இருப்பின்)

நகல் சான்றிதழ்கள் மற்றும் நிழற்படத்தின் மீது பள்ளித் தலைமை ஆசிரியர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் ஒப்பம் பெறப்படல் வேண்டும்.

**குறிப்பு** : மூலச் சான்றிதழ்கள் (Original) எவற்றையும் இணைத்தல் கூடாது.

**விண்ணப்பம் வந்து சேர வேண்டிய முகவரி**

முதல்வர்,
கூட்டுறவு ஆசிரியர் பயிற்சி நிறுவனம்,
62, சுய்ப்ரேன் வீதி, புதுச்சேரி – 605001.

**சேர்க்கை வழிமுறை**

1. விண்ணப்பங்களை ஆய்வு செய்தபின்னர், பாடப் பிரிவின் அடிப்படையில் மதிப்பெண் தரவரிசை பட்டியல் வெளியிடப்படும்.
2. பின்னர் பாடப்பிரிவின் மதிப்பெண் தரவரிசைப் படியும்,இட ஒதுக்கீட்டிற்கான அரசு வழிகாட்டு நெறிமுறைகளின் படியும், ஒவ்வொரு பாடப் பிரிவுக்கும் தெரிவுப்பட்டியல் (Selection list) வெளியிடப்படும்.
3. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு நேர்காணலுக்கான தகவல் அனுப்பப்படும்.
4. இட ஒதுக்கீடு* (* அரசு வழிகாட்டு நெறிமுறைகளின் படி மாறுதலுக்கு உட்பட்டது)

**(a) பாடப்பிரிவுக்கான இடஒதுக்கீடு:**

| | |
|---|---|
| அறிவியல் பாடப் பிரிவு | 50% |
| கலைப் பாடப் பிரிவு | 30% |
| தொழிற்கல்வி பாடப் பிரிவு | 20% |

**(b) இன இட ஒதுக்கீடு**

(i) செங்குத்து ஒதுக்கீடு (Vertical Reservation)

| | | |
|---|---|---|
| 1. அட்டவணை இனத்தவர் | (SC) | 16% |
| 2. பிற்படுத்தப்பட்டோர் | (BC) | 34% |
| 2.1 அ) மிகவும் பிற்படுத்தப்பட்டோர் | (MBC) | 18% |
| ஆ) அதி மிக பிற்படுத்தப்பட்டோர் | (EBC) | 2% |
| 2.2 அ) பிற பிற்படுத்தப்பட்டோர் | (OBC) | 11% |
| ஆ) பிற பிற்படுத்தப்பட்டோர் (இஸ்லாமியர்) | (BCM) | 2% |
| 2.3 பிற பிற்படுத்தப்பட்டோர் (மலை வாழ் இனத்தவர்) | (BT) | 1% |

ii) கிடை ஒதுக்கீடு (Horizontal Reservation)

1. விடுதலைப் போராட்ட வீரர்கள் வாரிசு 4%
2. மாற்று திறனுடையோர் (PH) 3%
3. முன்னாள் இராணுவத்தினர் வாரிசு 3%
4. சிறந்த விளையாட்டு வீரர் 1%

நேர்காணல் (Interview)

1. நேர்காணலின்போது, விண்ணப்பதாரர் தங்கள் பெற்றோருடனோ அல்லது பாதுகாவலருடனோ (பெற்றோர் இல்லாதோர் மட்டும்) கலந்தாய்வில் பங்கு பெறலாம்.

2. நேர்காணலின் போது, அனைத்து மூலச்சான்றிதழ்களையும் (Original) ஒப்படைக்க வேண்டும். இல்லையெனில் சேர்க்கை வாய்ப்பை இழக்க நேரிடும்.

3. வேறு படிப்புகளில் சேர்ந்திருப்போர் மட்டுமே மூலச் சான்றிதழ் இல்லையெனில், அக்கல்வி நிறுவனத்தின் படிப்புச் சான்றிதழ் (Study Certificate) மற்றும் சான்றிதழ்களின் நகல்களுடன் நேர்காணலில் பங்கு பெறலாம்.

4. சேர்க்கையை உறுதி செய்த பின்னர், மூலச் சான்றிதழ்களை ஒப்படைத்து, உரிய கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும் இல்லையெனில், அத்தகைய விண்ணப்பதாரருக்கு மீண்டும் வாய்ப்பு அளிக்கப்பட மாட்டாது.

பொது:

1. நேர்காணல் மற்றும் சேர்க்கைக்குப் பின்னர் மூலச் சான்றிதழ்களைத் திரும்பப் பெறவியலாது. எனவே விண்ணப்பதாரர் அனைவரும் தேவையான அளவு மூலச்சான்றிதழ்களின் நகல்களை எடுத்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

2. நேர்காணலுக்கு விண்ணப்பதாரர்கள் தங்கள் சொந்த செலவில் வருகை தருதல் வேண்டும்.

3. விண்ணப்பத்தில் கேட்கப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களையும் கவனமாகப் பதிவு செய்தல் வேண்டும். சரியான தகவல்களை விண்ணப்பத்தில் பதிவு செய்யத் தவறினால், அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு நிறுவனம் எந்த வகையிலும் பொறுப்பேற்காது.

4. சேர்க்கைக்குப் பின்னர், வேறு படிப்பிற்குச் செல்வோர்க்குச் சேர்க்கைக் கட்டணம் திரும்பத் தரப்பட மாட்டாது.

# கூட்டுறவு ஆசிரியர் பயிற்சி நிறுவனம்

62, சுய்ப்ரேன் வீதி, புதுச்சேரி – 605001

விண்ணப்ப எண் :

பதிவு எண் :

## ஆசிரியர் கல்வி பட்டயப் படிப்பு (D.T.Ed TAMIL MEDIUM) விண்ணப்பப் படிவம் 2011-2012

அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும் :

நிழற்படம் ஒட்டவும்

| | தமிழில் | ஆங்கிலத்தில் |
|---|---|---|
| 1. விண்ணப்பதாரரின் பெயர் | :------------------------ | ------------------------ |
| | :------------------------ | ------------------------ |
| 2. தந்தை பெயர் | :------------------------ | ------------------------ |
| 3. தாய் பெயர் | :------------------------ | ------------------------ |
| 4. பாதுகாவலர் பெயர் (பெற்றோர் இல்லையெனில்) | :------------------------ | ------------------------ |

[redacted]

6. பிறந்த தேதி : நாள் [ ] மாதம் [ ] வருடம் [ ]

7. வயது (31.07.2011 அன்று முடிய) : [ ] வருடம் [ ] மாதம்

8. பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் பெற்ற மொத்த மதிப்பெண்கள் :

விழுக்காடு :

9. மேனிலைப் பொதுத் தேர்வு எழுதிய விவரம்:

| தேர்வு எழுதிய கல்வி வாரியம் & தேர்வின் பெயர் | பாடப்பிரிவு (அறிவியல், கலை, தொழிற்கல்வி) | பயிற்று மொழி: தமிழ் / ஆங்கிலம் | தேர்வு மாதமும் ஆண்டும் | தேர்வுப் பதிவெண் | பாடம் | பெற்ற மதிப்பெண் | உச்ச மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | கூடுதல் | |

மதிப்பெண் விழுக்காடு:

10. குடியுரிமை : இந்தியர் / பிறர் (குறிப்பிடவும்)

11. குடியிருப்பு மண்டலம் : புதுச்சேரி / காரைக்கால் / மாகி / ஏனாம் / தமிழ்நாடு

12. இனம் : அட்டவணை இனத்தவர் /
மிகவும் பிற்பட்ட வகுப்பினர் /
இதர பிற்பட்ட வகுப்பினர் /
ஏனையோர் (குறிப்பிடவும்)

13. சிறப்புப் பிரிவு : மாற்றுத் திறனுடையோர் (ஊனமுற்றோர்) /
விடுதலை போராட்ட வீரரின் குழந்தைகள்/
முன்னாள் இராணுவத்தினரின் குழந்தைகள்/
விளையாட்டு வீரர்.

14. மேனிலைத் தேர்வில் தேர்ச்சி பெற எடுத்துக் கொண்ட அமர்வுகள் :

| 1 | 2 | 3 | 3க்கு மேல் |
|---|---|---|---|

15. தமிழை மொழிப் பாடமாகப் புயின்ற இறுதி வகுப்பு :

16. முகவரி : ----------------------------------------

----------------------------------------

----------------------------------------

----------------------------------------

அஞ்சல் குறியீட்டு எண் : ----------------------------------------

தொலைபேசி எண் / அலைபேசி எண் : ----------------------------------------

## உறுதிமொழி

மேலே குறிப்பிட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையானவையென உறுதி கூறுகிறோம்.

பெற்றோர் / பாதுகாவலர் ஒப்பம் விண்ணப்பதாரர் ஒப்பம்

இடம் :

நாள் :

| வரிசை எண் | சான்றிதழ் நகல்கள் | | அலுவலகக் குறிப்பு |
|---|---|---|---|
| 1. | கல்வி நிறுவன மாற்றல் சான்றிதழ் | | |
| 2. | பத்தாம் வகுப்புச் சான்றிதழ் | | |
| 3. | மேல்னிலைக் கல்விச் சான்றிதழ் | | |
| 4. | குடியிருப்புச் சான்றிதழ் | புதுச்சேரி, தமிழ்நாடு | |
| 5. | குடியுரிமைச் சான்றிதழ் | | |
| 6. | இனச் சான்றிதழ் | | |
| 7. | சிறப்பு இட ஒதுக்கீட்டுச் சான்றிதழ் | | |